முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,பொள்ளாச்சி

நாள்:18.03.2026, அ.வ.எண். 227/2016 வா.சா.1. பாலசுப்பிரமணியன், த/பெ. லட்சுமணன்

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 1 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி**

4) தாவா தடத்தை அளக்க சொல்லாததற்கு காரணம் அது போன்று 3 அடி இல்லை என்பதால் தான் என்றால் சரியல்ல 12 அடி தடம் உள்ளது . அவ்வாறு 12 அடி தடம் உள்ளது என்பது பொய் என்றால் சரியல்ல.,வண்டித்தடம் கிழமேல் ரோட்டிலிருந்து தெற்கே செல்கிறது என்றால் சரிதான். யார் யார் பூமி வழியாக தடம் செல்கிறது என்றால் 1 முதல் 3 பிரதிவாதிகள் பூமிகள் வழியாக செல்கிறது அதற்கு பின்னிட்டு தான் எனது பூமியை சென்றடைகிறது என்றால் சரிதான். வண்டித்தடத்திற்கு கிழபுறமும் மேபுறமும் 1 , 2 பிரதிவாதிகளின் பூமிகள் உள்ளது என்றால் சரிதான்.

5) நான் சொல்லும் 9 அடி வீல் மார்க் தடம் அதை ஒட்டி மேல்புறம் 3 அடி உயரத்தில் வரப்பு உள்ளது என்றால் சரியல்ல. 3 அடி தள்ளி தான் உள்ளது. 3 அடி தள்ளி வரப்பு உள்ளதை என்பதை எனது பிராதில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். 3 அடி தடம் உள்ளது என்பதை நீதிமன்ற ஆணையர் வந்த போது அளந்து காண்பித்தேனா என்றால் நீதிமன்ற ஆணையர் வந்த போது அந்த தடத்தின் வழியாக வாகனங்கள் சென்று கொண்டிருந்ததால் அளந்து காண்பிக்கவில்லை .

6) 9 அடி அகல வீல் மார்க் தடத்தின் வழியாகத்தான் இது நாள் வரை வாகனங்கள் சென்று வருகிறது என்றால் சரிதான். கிழபுறம் உள்ள 1,2 பிரதிவாதிகளின் பூமி வண்டித்தடத்தை ஒட்டியே தென்னந்தோப்பு உள்ளது என்றால் 3 –4 அடி தள்ளி உள்ளது. அவ்வாறு நான் சொல்வது பொய் என்றும் 1/2 அடியிலேயே பிரதிவாதிகளின் பூமி உள்ளது என்றால் சரியல்ல. 1, 2

ஒப்பம்/–(R. சுஜாதா)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி.

பொள்ளாச்சி.

பிரதிவாதிகளின் தென்னை மரங்களுக்கு சுமார் 40 வயது இருக்குமா என்றால் இருக்கும்.

7) வண்டித்தடத்தினை இது நாள் வரையில் யாரும் ஆக்கிரமிப்பு செய்யவில்லை என்றால் 1 ம் பிரதிவாதி துரைசாமி ஆக்கிரமிப்பு செய்துள்ளார். எத்தனை அடி ஆக்கிரமிப்பு செய்துள்ளார் என்றால் 1 –2 அடி ஆக்கிரமிப்பு செய்துள்ளார். எத்தனை ஆண்டுகளாக அது போல் 1 ம் பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்துள்ளார் என்றால் நான் பூமி வாங்கியதிலிருந்தே ஆக்கிரமிப்பு செய்துவருகிறார். தாவா தாக்கல் செய்த போது 1 ம் பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்திருந்தாரா என்றால் செய்திருந்தார்,அந்த விவரத்தை நான் எனது பிராதில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

8) வண்டித்தடத்தில் 2 பி ஏ பி மடை உள்ளதா என்றால் உள்ளது. ஒரு மடை கிணற்றுத் தண்ணீருக்கும் மற்றொரு மடை பி ஏ பி தண்ணீருக்கும் உள்ளது. பிராது வரைபடத்தில் மேற்படி மடை குறித்து காண்பிக்கவில்லை என்றால் சரிதான். பிராது வரைபடத்தில் மொத்தமாக 12 அடி என்று தான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். பிராது வரைபடத்தில் வண்டித்தடத்தின் உண்மையான அமைப்பை காட்டாததால் மேற்படி வரைபடம் ஏற்புடையது அல்ல என்றால் சரியல்ல.

9) ஆணையர் அவரது வரைபடத்தில் 2 மடைகளின் அளவையும் சேர்த்து 10 1/2 அடி என்று குறிப்பிட்டுள்ளார் என்றால் என்னுடைய தோட்டத்திற்குள் 10 1/2 அடி உள்ளது. 1, 2 பிரதிவாதிகளின் பூமிக்குள் 9 அடி தடம் தான் காண்பித்துள்ளார் என்றால் 17 1/2 அடி என்று காண்பிக்கப்பட்டுள்ளது. ஆணையர் அவரது அறிக்கையில் 2 மடைகளின்அளவையும் சேர்த்து தான் 17 1/2 அடி என்று

ஒப்பம்/–(R. சுஜாதா)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி

குறிப்பிட்டுள்ளார் என்றால் சரியல்ல. கிழமேல் ரோட்டிலிருந்து தென்புறம் திரும்பும் இடத்தில் பொதுவாக தடம் அகலமாக இருப்பதால் அந்த இடத்தில் 13 அடிஎன்று காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

10) 4 ம் பிரதிவாதியின் முன் மூல ஆவணங்களை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். வா சா ஆ 2 ஆவணம் 4 ம் பிரதிவாதியின் குடும்பத்திற்குள் ஏற்பட்ட பாகபத்திரம் என்றால் சரிதான். வா சா ஆ 2 ஆவணத்தில் கால்நடைகள் ,ஆள்கள், வண்டி வகையறாக்கள் நடந்து கொள்ளும் தட பாத்தியங்களும் சகிதம் என்று குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான்.

11) 1 முதல் 3 பிரதிவாதிகள் மீது தான் நான் பரிகாரம் கேட்டு தாவா தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். 1, 2 பிரதிவாதிகள் வழக்கறிஞர் மூலம் எதிர்வாதம் தாக்கல் செய்திருந்தார்கள் என்றால் சரிதான். 2 ம் பிரதிவாதி தனியாக தற்போது எதிர்வாதம் தாக்கல் செய்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. எனது பிராதில் எந்த ஆவணத்தின் அடிப்படையில் 12 அடி தடம் உள்ளது என்று குறிப்பிடவில்லை என்றால் குறிப்பிட்டுள்ளேன்.

12) என்னுடைய கிரயப் பத்திரத்தில் குறிப்பிட்டு 12 அடி தடம் என்று உள்ளதா என்றால் இல்லை. வீல் மார்க் தடம் உள்ளது மட்டும் தான் 9 அடிக்கு தடம் உள்ளது என்றும் நான் சொல்வது போல் 12 அடி தடம் இல்லை என்றால் சரியல்ல. 1 ம் பிரதிவாதி பூமியில் 8 1/2 தடம் உள்ளதாக கூறுகிறார்கள் என்றால் சரியல்ல. நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் குறிப்பிட்டு 12 அடி தடம் என்று கூறவில்லை என்றால் கூறியுள்ளார். அவ்வாறு நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் 12 அடி தடம் கிடையாது என்றும் கற்பனையாக இந்த தாவாவை

ஒப்பம்/-(R. சுஜாதா)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி

தாக்கல் செய்துள்ளதால் தாவா தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

ஒப்பம்/-(R. சுஜாதா)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி